BTA
BERGEN TAMILSK AVIS

# தேன்தமிழிதழ்

Org.nr: 926 840 320 - ISSN 2703-8440

Bergen Tamilsk Avis,
Krohnegården 5b,
5146 Fyllingsdalen,
Norway.



Art:Ravi Palette

அன்பு உறவுகளுக்கு இனிய புத்தாண்டு, பொங்கல் வாழ்த்துக்கள்.



இது தேன் தமிழ் இதழின்12வது பதிப்பு.
ஓராண்டை எட்டிப் பிடித்து விட்டது நமது மாத இதழ். சமூக அக்கறையும், அர்ப்பணிப்பும் கொண்ட பல எழுத்தாளர்கள், நிழற்படக் கலைஞர்கள், மருத்துவர், ஆய்வாளர்கள் எனப் பலரும் தாயகத்திலிருந்தும், புலம்பெயர் நாடுகளிலிருந்தும் ஆழமான ஆக்கங்களால் சிறப்பித்து வருகின்றனர்.

பதிவு செய்யப்பட்ட நிழற்படங்கள், கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், விமர்சனக் கண்ணோட்டங்கள், செய்திகள், கொரோனா தொற்று பாதுகாப்பு தகவல்கள் என ஆரோக்கியமான பல பதிவுகளை தாங்கி வந்திருக்கிறது நமது இதழ். அத்தோடு மழலைகளின் சித்திரங்களும் அவை கூறிய கதைகளும் இதழுக்கு அழகு கொடுத்தன என்றே கூறவேண்டும்.

கடந்த ஓராண்டு முழுவதும் தேன்தமிழ் இதழோடு பயணித்து ஆக்கங்கள் தொடர்பான சிறப்பு விமர்சனங்கள் தந்து எம்மை ஊக்குவித்து வந்த அனைத்து உறவுகளுக்கும் நன்றி கூறுவதோடு, தொடர்ந்தும் தங்களது ஆக்கபூர்வ விமர்சனங்களையும் ஆதரவையும் தந்து நமது இதழ் 2022இலும் சிறப்பாய் மலர உங்களது ஆதரவினை கேட்டு நிற்கின்றோம்.

ஒரு புதிய ஆண்டிலே நாம் கால் பதிக்கிறோம். புலம் பெயர் வாழ் தமிழர்கள் தாம் வாழும் நாட்டின், அச்சமூகத்தின் பண்பான குடிமக்களாக வாழ வேண்டிய பொறுப்பு உள்ளது.

ஈழத்தமிழர்களுள் மிகப்பெரும் கல்விமான்களை, சமூகத் தொண்டர்களை உருவாக்கிய முதன்மை நாடுகள் நோர்வேயும் ஒன்றாகும். நாம் இந்நாட்டு மக்களோடு இசைவாக்கம் அடைவதும், நாட்டு வளங்களை பாதுகாத்து பேணுவதும், நாட்டின் ஜனநாயகப் பண்புகளைக் கடைப்பிடிப்பதும், நமது மிகப் பெரும் பொறுப்பாகும். அதற்காக தேன் தமிழ் இதழ் எப்போதும் குரல் கொடுத்துக் கொண்டே இருக்கும்.

தமிழர்களின் திருவிழாவான பொங்கல் நாள் தை 14. உழைக்கும் மக்கள் இயற்கைக்கும், உதவி புரிந்த உயிர்களுக்கும் நன்றி கூறும் பண்பாட்டுப் பெருவிழா. உலக வாழ் அனைத்துத் தமிழர்களும் உணர்வுபூர்வமாக கொண்டாட வேண்டிய நன்றிப் பெருவிழா. உழைக்கும் மக்கள்
அதிகம் மகிழ்ச்சியாக நிமிர்ந்து நிற்கும் நாளிது. சமயம் கடந்து அனைவரும் இணைந்து கொண்டாடுவோம்.

எமது இதயம் நிறைந்த தைப்பொங்கல் வாழ்த்துக்கள்.

## தைமகளே வருக வருக...

–ஆன் அன்ரனி.



தைமகளே வருக வருக!
தரணியில் இன்பம் பெருக!
பேரிடர்பொழுதில் -பாரில்
பொருந்தும் துயர் தீர்த்திட
தைமகளே வருக........

கலிமுற்றி தாண்டவம் ஆடுது
கிலிபற்றி மனதினை கொல்லுது
பலிகொடுத்து பண்டிகை கொண்டாடும்
வலிசுமந்த தலைமுறை நாமானோம் .....

ஊர்கூடி வயல் உழுது
வரப்புயர நீர் இறைத்து
விதைவிதைத்து கதிறுத்து
காத்துவந்தோம் வையகத்தை.....

விதைவிதைக்க வயலுமில்லை
கதிறுக்க உரமுமில்லை
கையறு நிலையினிலே
கதிகலங்கி நிற்கின்றோம்!

நாகரீகம் தேடி நிதம்
ஏதிலிகள் ஆகிவிட்டோம்
எமெக்கென்ற முகவரியை
எகத்தாளமாய் தொலைத்துவிட்டோம்.

பாலுமில்லை அரிசியுமில்லை
பஞ்சத்தில் அஞ்சுகின்றோம்
நெஞ்சத்தில் துணிவிருந்தும்
வஞ்சத்தில் வாடுகின்றோம்!

மறந்துவிட்ட மரபையெல்லாம்
மாற்றங்கள் தந்ததுவே
துறந்து விட்ட பாரம்பரியங்கள்
முளைக்குதிங்கே மாற்றங்களால்.

விறகடுப்பில் பொங்கல் வைத்து
விருந்துண்டு மனமகிழ்ந்து
ஆதவனுக்கும் உழவர்க்கும்
நன்றி சொல்லும் இந்நாளில்

மனம் குளிர அழைக்கின்றோம்
தைமகளே வருக! வருக!
தரணியில் இன்பம் பெருக
பேரிடர் போக்க, பெருந்துயர் நீங்க

தைமகளே வருக வருக.....









வாசகர்கள் தேன் தமிழிதழ் சந்தா
செலுத்த.... வங்கிக் கணக்கு.

Bergen tamilsk avis
3626 31 78585
Vips: 729129

வருடம் 12மின் இதழ்கள் 200குரோணர்கள்.
அச்சுப்பிரதி- 300குரோணர்கள் தபால்செலவு
உட்பட (நோர்வே).
மேலதிக விபரங்களுக்கு: யூலியஸ்
தொலைபேசி எண்: (47) 924 63 674

# வெளிநாட்டு பிள்ளைகளும் ஈழத்து பெற்றோரும்– மனம் நெருடும் காலம்

*-ப்ரியமதா பயஸ்-*



தமிழன் இல்லாத நாடும் இல்லை தமிழனுக்கு என்று ஒரு நாடும் இல்லை என்பார்கள். இலங்கைத் தமிழனுக்கு ஒரு நாடும் இல்லை அவனுக்கான நிம்மதிக்கு ஒரு முடிவும் இல்லைத்தான். 30 ஆண்டுகால போர் பல மறக்கமுடியாத சூழ்நிலைகளை ஏற்படுத்திவிட்டு சென்ற பல ஆண்டுகளுக்கு பின் இப்போது நாம் அனுபவிக்கும் மிகப்பெரிய துர்ப்பாக்கிய சம்பவம் - வெளிநாடுகளில் இருக்கும் உறவுகளின் பெற்றோரும் மூத்தவர்களும் (வயது முதிர்ந்தவர்கள்) அல்லற்படும் விடயம்தான்.

எத்தனை வசதிகளுடன் வெளிநாடுகளில் இருந்தாலும், எத்தனை இலட்சம் பணத்தைக் கொட்டி செலவுசெய்யத் தயாராக இருந்தாலும் புலத்தில் இருக்கும் தள்ளாத வயது உறவுகளுக்கு ஒரு நிம்மதியான வாழ்க்கையை அமைத்துக் கொடுப்பதில் இருக்கும் சிரமம் வெளிநாடுகளில் அனைவரின் சொத்து சுகங்களையும் நிம்மதியையும் இழக்கச் செய்துவிடுகிறது.

பெற்றதாயும் தந்தையும் தள்ளாத வயதில் தனித்திருக்க, “என்னால் முடியவில்லை மரணத்தை நெருங்கிவிட் டேன், நீ அருகில் இருக்கவேண்டும் போல் உணர்கிறேன்” என்கின்ற பெற்றவர்களின் ஆதங்கம் வெளிநாடுகளில் இருக்கும் பிள்ளைகளின் மனதை நொருக்கிப் போட்டுவிடுகிறது.

அருகில் இருக்கும் உறவுகள் அவர்களை அரவணைக்க தயாராக இல்லை. காரணம் “வெளிநாடுகளில் இருக்கும் பிள்ளைகள் பார்த்துக்கொண்டால் என்ன?” என்கின்ற ஒரு வித கையாலாகாத்தனம். இத்தனைக்கும் அப்பால் பெற்றவர்கள் நோயோடும் தனிமையோடும் தள்ளாடும்போது வெளிநாடுகளில் இருக்கும் பிள்ளைகள் அவர்களைக் கவனிக்கவும் அவர்களுக்கு நேரம் ஒதுக்கவும் படும் பிரயத்தனங்கள் ஏராளம் ஏராளம்.

வெளிநாடுகளில் இருந்து இலங்கை வரும் விமானங்களில் பேசப்படும் விடயங்கள் அப்பாவுக்கு சுகமில்லை அதுதான் அவசரமாக போகிறேன் ஒறுக்கிழமை லீவுதான் என்பதும், அம்மா மிக வருத்தம் ஆகி மருத்துவமனையில் இருக்கிறா என்னை பார்க்க ஆசைப்படுகிறா அதுதான் அவசரமாக இந்த கொரோனா நெருக்கடியான நேரமும் வெளிக்கிட்டு இருக்கிறேன் என்கின்ற கண்ணீரும் வேதனையும் நிறைந்த உரையாடல்களே அதிகமாகி போயிருக்கின்றன.

பெற்று வளர்த்து ஆளாக்கிய உறவுகளை ஏதோ ஒரு ஒரு காரணத்துக்காக பிரிந்து, அதாவது அது பொருள் தேடலாக இருக்கலாம் அல்லது நாட்டின் பாதுகாப்பற்ற சூழலாக இருக்கலாம் இன்னோரன்ன எதோ ஒரு காரணத்துக்காக பிரிந்துபோன பிள்ளைகளின் நிலைமை இப்போது மிக வேதனை ஆகி இருக்கிறது. 30வருட போரின்பின் தாய் தந்தையர்கள் இன்னும் முப்பது வயது கூடியவர்களாகி இருப்பார்களே, இத்தனைகாலமும் அவர்கள் சுயமாகவே இயங்கிக்கொண்டு இருந்திருப்பார்கள் ஆனால் இப்போது அவர்களின் நிலைமை மிக மோசமாகி இருக்கிறது. இதனால் பரந்துபட்ட அளவில் வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளின் தாய் தந்தையர்கள் தாயகத்து வாழ்க்கை எத்தனை வசதி வாய்ப்புக்கள் இருந்தபோதும் தனிமையும் வெறுமையுமாகி இப்போது அது வெறும் ஏக்கமாகிப்போய் உள்ளது.

வெளிநாடுகளில் இருந்து தாயகம் வரும் ஒவ்வொரு உறவும் ஒரு துக்க நிகழ்வுக்காகவும் ஒரு வலி சுமக்கும் நிகழ்வுக்காகவும் வருவதாகிப் போயுள்ளது தற்போதைய நிலைமை. இது ஒன்றும் கற்பனை அல்ல முற்றிலும் உண்மை.

## கடல் பற்றிய இரண்டு பாடல்கள்

-தமயந்தி-

இசை: சுந்தர் கணேசன் (குட்டி மாஸ்ரர்)

தயாரிப்பு: தேன் தமிழ் ஓசை

காத்தடிக்குது புயலடிக்குது
கள்ளியங் கொப்பெல்லாம் பேர்த்தடிக்குது
கண்டல் மரத்தில ஏறின சோளகம்
கண்டபடி கொப்ப முறிச்சடுக்குது

என்ன புடிக்கிறாய் சின்ராசு
நண்டு புடிக்கிறன் கந்தையரே
பொத்திப் பொத்திப்புடி சின்ராசு
பொந்துக்க பூந்திற்றுக் கந்தையரே
பட்டப் படிப்பொண்டும் இல்லாம
நண்டு பிடிப்பியோ சின்ராசு
நாண்டுக்கொண்டு சாவன் கந்தையரே
நல்லா வருகுது வாயிலதான்

பொல்லா நரியும் புனுகுப் பூனையும்
ஒண்டாய் இருந்தது
பொந்துக்குள்ள நண்டைப் புடிக்க ரெண்டுமே
சிண்டாய்ப் போனது
நண்டார் நிலத்தக் கிண்டிக்கொண்டு
மற்ற வழியக் கண்டாரே
ஒண்டாய் இருந்த நரியும் பூனையும்
ரெண்டு துண்டாகவே போனாரே

நாக்கில ஊறின எச்சிய வச்சுத்தான்
மழ வருமெண்டு சொன்னானே
வெள்ளி முளைக்கிற மேகத்த வச்சுத்தான்
எட்டுத் திக்குகளக் கண்டானே
நுகைப்பெடுக்கிற கடல வச்சுத்தான்
வங்குகள் நிறப்பி வந்தானே
காத்துக்கடல்களும் புசலும் தாண்டித்தான்
பாய்மரம் ஏறி நிண்டானே
கொம்பாசக் கண்டதும் சவுண்டக் கண்டதும்
எங்கயிருந்தெண்டு சொல்லு கந்தா
யாழ்ப்பாணச் சட்டிக்க குழம்புஞ் சொதியும்
வேறென்ன கண்டது சொல்லு கந்தா

முதளை முதுகில் ஏறிக் குரங்கு
அக்கரை போனது
மரக்கிளயில ஈரல் காயிற
கதையைச் சொன்னது
நம்பின முதளை ஏமாந்த சங்கதி
கதையும் ஆனது
கூட்டாளி மாருக்க காலம் முழுக்க
பகையும் ஆனது



படம்: தமயந்தி

மனசுக்குள்ளே குடிசை கட்டி
கதைகள் சொல்லும் கடலம்மா
தாத்தன் அப்பன் வேட்டை கொண்ட
கதைகள் சொல்லும் கடலம்மா
விதைத்துக் கிடக்கும் துயரையெல்லாம்
அழித்து எழுதும் அலைகளை
அனுப்பி வைக்கும் கதைகளினை
எடுத்துச் சொல்லு கடலம்மா
கூத்தும் பாட்டும் திரிந்த கரையை
கூறு போடக் கண்டாயா
கலமும் மரமும் மிதந்த மடியில்
கலகம் புரிதல் கண்டாயா
என்னடி என்னம்மா
மவுனம் என்ன சொல்லம்மா
மண்ணடி வேரில் எல்லாம்
நெருப்பைக் கொட்டிய தாரம்மா

ராவணன் மீசை நடனம் புரிந்த
மணல் மேடெல்லாம் போனதெங்கே
கவுதாரி மடியின் நாவல் பாலை
மருந்துக்கும் இல்லை ஆனதிங்கே
நாவட்டப் பாறை தாமரை காத்தான்
எதுவுமே இங்கே காணவில்லை
என்னடி என்னம்மா
மவுனம் என்ன சொல்லம்மா
மண்ணடி வேரில் எல்லாம்
நெருப்பைக் கொட்டிய தாரம்மா

ஏழ்கடல் ஆடும் தீடையின் மேனி
கிழிபடும் கோலமும் யார் அறிவார்
சூழ்கலி நீங்க பாடிய காலம்
ஆடிய கோலம் பொய்தானே
ஆழியில் வாழ்வு இருந்தது என்று
இனிவரும் சந்ததி அறிவாரோ
என்னடி என்னம்மா
மவுனம் என்ன சொல்லம்மா
மண்ணடி வேரில் எல்லாம்
நெருப்பைக் கொட்டிய தாரம்மா

# இலங்கையில் பெண்தலைமைத்துவ குடும்பங்களின் வாழ்வியல் -பாகம் 04





**-ப்ரியமதா பயஸ்-**

இலங்கையில் வாழும் பெண்தலைமைத்துவ குடும்பங்களின் நிலைமை மிக மோசமானது என்பது தொடர்பான தொடர் உண்மை விடயங்களை ஆராய்ந்து பேசிக்கொண்டு இருக்கிறோம். இந்தப் பகுதியில் முக்கியமாக தனியே வாழும் பெண்களுக்கு கொடுக்கப்படும் பாலியல் தொந்தரவுகள் தொடர்பாக கண்டிப்பாகப் பேசவேண்டி உள்ளது. அந்தவகையில் ஒரு சமூக அக்கறையுடன் செயற்படும் பெண்ணாக நான் பல பாதிக்கப்பட்ட பெண்களை நேரடியாகச் சந்தித்து பேசிய உண்மைகளை இங்கே (வெளிப்படை அற்று) கூறவேண்டியதாகத்தான் இருக்கிறது .

தனியேவாழும் பெண்கள் "திருமணம் செய்யப்படுவாய்" "உன்னை நான் காலம்காலமாக வைத்து பார்த்துக்கொள்வேன்" என்கின்ற ஆசை வார்த்தை காட்டி மோசம் செய்யப்பட்ட அதிக சம்பவங்கள் வெளிப்படையாக பேசப்படாத சம்பவங்களாக இருந்துகொண்டேதான் அல்லது நடந்துகொண்டுதான் இருக்கிறது. இதனை பெரும்பாலான பெண்கள் வெளியில் யாரிடமும் சொல்வதில்லை. எதிர்பாராதவிதமாக ஏதாவது அசம்பாவிதங்கள் நடந்தால் மட்டுமே இந்த பெண்களின் அவலநிலை வெளியே தெரியருகிறது. பெரும்பாலும் தம்மால் சுயமாக ஒரு தொழிலை மேற்கொண்டு பிள்ளைகளை வளர்க்க முடியாத இளம்பெண்கள் பெரும்பாலும் இந்த மாயவலையில் வீழ்ந்து மனதளவில் நொந்துபோகின்றனர். இந்த விடயத்தை கண்கூடாக பார்க்கக்கூடியதாக உள்ளது. பெரும்பாலும் இந்தப்



பெண்கள் மனதளவில் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டவர்களாக, விரக்தியின் உச்ச நிலையில் பிள்ளைகளுக்காக தங்கள் உயிரை கையில் பிடித்து வைத்துக்கொண்டு வாழ்பவர்களாக இருக்கின்றனர்.

இவர்கள் மனநிலையில் மிக மோசமாக

பாதிக்கப்பட்டுள்ளனர். சரியான உணவு உட்கொள்ளாமலும், சரியான தூக்கம் கொள்ளாமலும், தன் உடல் நிலையை சரியாக கவனிக்காமலும் மனவிரக்தியினால் சொற்ப காலத்தில் மரணத்தை நெருங்கியவர்களாக இருக்கின்றனர்.

இந்த பெண்களுக்கான உளவியல் என்பது மிக அவசியமானதாக இருக்கின்றது. பல பெண்கள் குழந்தைகளையும் கைவிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ள சம்பவங்களும் ஏராளமாக பதிவாகி இருக்கின்றன. இதற்குப் பல காரணங்களை நாம் அடுக்கிக்கொண்டே போகலாம். அவற்றில் முக்கியமானது ஆண்களின் நம்பிக்கைத் துரோகம் என்பது அந்த பெண்களின் அவலநிலையில் இருந்து அதிகமாக காணக்கூடியதாக இருக்கின்றது.

ஒரு சில பெண்களுக்கு நல்ல வாழ்க்கையை ஆண்கள் அமைத்து கொடுத்து இணைந்து மகிழ்வாக வாழும் சம்பவங்களையும் இங்கே மறுப்பதற்கு இல்லை. ஆனால் பெரும்பாலும் வறுமையும் தனிமையும், வசதியின்மையும் வாட்டும் பெண்கள் இந்த பாலியல் சுரண்டல்களுக்கு பலியாகி தமது வாழ்க்கையின் மீதிக்காலத்தையும் நிம்மதி இல்லாமல் கழிக்கும் சூழலுக்கு ஆட்பட்டுப்போகின்றமை மிக மோசமான உண்மையாகவே இருக்கின்றது.

படித்த தொழில் செய்யும் பெண்கள் கூட போரில் கணவனை இழந்த பெண்ணாக இருக்கும் பட்சத்தில் பலவகையான சமூக நெருக்கடிகளையும் மறைமுகமான பாலியல் சுரண்டலையும் அவள் எதிர்கொள்வதை இங்கே யாரும் மறுக்க முடியாது. முக்கியமாக பல பெண்கள் சமூகத்தில் தம்மை முன்நிலையில் இருப்பவர்களாக காட்டிக்கொள்ளும் ஆண்களிடம் மிக மோசமாக ஏமாந்துபோ கின்றவர்களாக இருக்கின்றனர்.

சமூகத்தில் பேசப்படும் ஒருவராக இருக்கின்றார் என்கின்ற காரணத்துக்காக தம் வாழ்வை நல்ல முறையில் வாழலாம் என எண்ணும் பல பெண்கள் இப்படி ஏமாற்றமான சூழலை சந்தித்து மன விரக்தியில் இருப்பதை கண்கூடாக காணக்கூடியதாக உள்ளது. இவர்களது மன விரக்தியான சூழல் பலவகையில் அந்த குடும்பத்தையும் அவர்களை சார்ந்து இருப்பவர்களையும் பாதிக்கின்றது. உதாரணமாக தமது உடல் நலனில் அக்கறை காட்டாமல் மிக மோசமான,



கவலையான மனநிலையோடு இருப்பதால் தம்மை நம்பி இருக்கும் பிள்ளைகளின் உணவு, உடை, கல்வி போன்றவற்றிலும் அக்கறை காட்டாமல் போகின்றனர். இதனால் ஒரு சமூகம் மிக மோசமான உடல் உள பாதிப்புக்கு ஆளாகின்றது. இந்த விடயங்களை அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் கருத்தில் எடுத்து, இந்த பெண்களை வழிப்படுத்த வேண்டிய கட்டாய சூழல் இருக்கின்றது. இதற்கு வெளிப்படையான காரணங்களையும் தகவல்களையும் தேடவோ கேட்டுப் பெறவோ முடியாது. ஆகையால் அத்தகைய பெண்களை இனம்கண்டு அவர்களுக்கான நல்ல வழிமுறை- களை அடையாளம் காட்டிட ஒட்டுமொத்தமான பெண் தலைமைத்துவ குடும்பங்களின் குடும்ப சூழ்நிலைகளை மிக அவதானத்தோடு கவனிக்கும் பொறுப்பை அரசும் சமூக சேவை நிறுவனங்களும் தம் கடமையாக கொள்ளவேண்டும். ஒரு பெண்ணின் வாழ்வியல் சூழ்நிலை பாதிக்கப்படும்போது கண்டிப்பாக அந்த பெண் வாழும் சமூக சூழ்நிலையும் பாதிக்கப்படும் என்பது நிதர்சனமான உண்மை. காரணம் இலங்கையின் சமூக கட்டமைப்பு அப்படியானதாகவே இருக்கின்றது. வெளிநாடுகளைப்போன்ற சமூக கட்டமைப்பு இலங்கையில் இல்லை ஆகையால் பெண்தலைமை குடும்பங்களின் இறுக்கமான, நலிவான, மனதளவில் விரக்தியுடன் இருக்கும் சூழ்நிலை மிக மோசமான அடுத்த தலைமுறைகளுக்கான பாதிப்பை ஏற்படுத்தும். இதைக் கவனிக்க தவறின் பெரும் இடர் நிறைந்த சூழலை அவர்களுக்கு நிரந்தரமாக்கும் கடமையற்றவர்களாக இருக்கும் மனிதர்களாக இருப்போம் என்பது உண்மை.

தொடரும்......

# மரணம் உன்னிடமிருந்து எதையாவது எடுத்துக்கொண்டு எதனை திருப்பித் தந்தது?




## Breaking is natural

கரவை தாசன்- டென்மார்க்

*நஜ்ஜா மேரி அட்ஸ் அவர்களின் சொந்த மகனை இழந்த அனுபவத்தில் எழுதப்பட்ட "மரணம் உன்னிடமிருந்து எதையாவது எடுத்துக்கொண்டு எதனை திருப்பித் தந்தது" என்ற அனுபவ சிறு கதையினை படித்துக் கொண்டிருந்தேன். கவிதையின் லயத்தில் அமைந்திருக்கும் அவரின் மொழி நடைக்குள் அமிழ்ந்து சாவும் வாழ்வின் ஒரு பகுதியே என்ற புதிர் அவிழ்புக்குள் பயணிப்பது ஒரு புரிதலைத் தந்திருந்தது.*

*அவர் மொழியில் புத்தகத்தில் குந்தியிருந்த வரிகள்:*

**"ஒருமுறை நான் கர்ப்பமாக இருந்தபோது எனக்குள் இருக்கும் குழந்தை புலிக்குட்டி என்று கனவு கண்டேன். அப்படியே அவன் பிறந்தபோது வெளிர் பழுப்பு நிற கண்கள் மற்றும் தங்க நிற தோல் கொண்ட விளையாட்டுத் தனமான, மென்மையான ஆனால் செல்லம் கொண்டவனாக இருந்தான். அவன் பசிய காட்டில் நடந்தான். காட்டின் பசுமையை விரும்பிக்கொண்டே ஆனால், சிங்கம் போல் நிமிர்ந்தான். எனினும் புலிகளின் தோலைப் போன்றே நிறமுடைய அவனுடைய மயிர்களில் ஒளி தெறித்து மினுமினுப்பதைப் பார்த்தேன். அவன் தனியாக நடந்தான். அவன் ஏன் தனியாக இருக்கிறான் என்பது அவனுக்கு புரியவில்லை. நான் கனவு கண்டதுபோல் அவனிடம் புலியின் சாயலே உள்ளது. ஆனாலும் அவன் நிமிர்ந்த நடையுடனே காட்டுக்குள் மறைந்தான்."**

*விஷயம் என்னவென்றால், சிறந்த புத்தகங்கள் பெரும்பாலும் ஒருவரின் இதயத்தை உடைத்து விடுகின்றன. அதை படைப்பாளி விரும்பலாம், இது படைப்பாளி மீதோ அல்லது படைப்பின்மீதோ உள்ளும் புறமுமாக பச்சாதாபத்தை ஏற்படுத்த கூடும். எதுவாயினும் சிறந்த புத்தகங்கள் தன்னையும் பிறரையும் புத்திசாலி ஆக்கிக்கொண்டே இருக்கின்றன.*

*உடைந்து போதல் என்பது இயற்கையானது.* Breaking is natural.

........................................................................................................................



*1963 டிசம்பர் 24இல் பிறந்த நஜா மேரி எய்ட் (Naja Marie Aidt) ஒரு டெனிஷ் எழுத்தாளர்.*

*நஜா தனது 28வது வயதில் (1991 இல்)* **"நான் இளமையாக இருக்கும் வரை"** (længe jeg er ung) *எனும் கவிதைத் தொகுப்புடன் டெனிஷ் இலக்கியக் களத்தில் அறிமுகமாகி, பல படைப்புக்களை வெளிக் கொணர்ந்ததோடு,* Nordic Council Literature Prize *உட்பட பல இலக்கியத்துக்கான பரிசில்களையும் பெற்றுக் கொண்டார். அத்தோடு, 2006ஆம் ஆண்டிற்கான டெனிஷ் விமர்சகர் விருதையும் பெற்றார்.*
*இவரது நூல்களில் சில ஜெர்மன், இத்தாலியன், ஸ்வீடிஷ் மொழிகளிலும் வெளியாகியுள்ளன.* □



# நெஞ்சார்ந்த அஞ்சலி

அமரர்

## றொபேட் டனிசியஸ் தயானந்தன்

*22.11.1949 - 26.01.2022*

*1950,60,70களில் உயர் கல்விக்காகவும் தொழிற் கல்விக்காகவும் ஈழத் தமிழர்கள் பலரும் நோர்வே நகரில் குடி புகுந்தனர். புலம்பெயர்ந்த நோக்கம் கல்வியானாலும், தொழிலானாலும் தமிழர்கள் தமக்கு நெருங்கிய நட்பு உறவினை வளர்த்துக்கொண்டனர். தமக்கென ஒரு சிறந்த சமூகத்தை கட்டியெழுப்ப துணிச்சலோடு தூர நோக்கோடு செயற்பட்டனர். அதன் விளைவாக இன்றும் நோர்வே வாழ் தமிழர்கள் தாயகத்து வாசனையோடும், கலாச்சார விழுமியங்களோடும் ஒரு சிறந்த சமூகமாக வாழ்ந்து வருகிறார்கள். தமது இரண்டாம் மூன்றாம் தலைமுறைகளையும் எமது பண்புகளோடு வளர்த்து வருகின்றமையினைக் காணமுடிகிறது.*

*இதற்காக உழைத்த நம் முன்னோர்கள் பலரும் உடல்நலக் குறைவாலோ, வயது முதிர்ச்சியாலோ நம்மை விட்டு பிரிந்து கொண்டிருக்கிறார்கள்.*

*அவ்வாறான பேரதிர்ச்சி கடந்த 26.01.2022 அன்று அதிகாலை றொபேட் டனிசியஸ் தயானந்தன் அவர்கள் மரணத்தை தழுவிக் கொண்டார் என்ற செய்தி காற்றோடு கலந்து வந்தது. இவரது இழப்பு எம் தமிழ் உறவுகள் அனைவருக்குமே மிகப்பெரும் அதிர்ச்சியினை ஏற்படுத்தியுள்ளது.*

*22 11 1949 இல் யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை கூளாவடியில் பிறந்து 1973-ஆம் ஆண்டு புலத்தை பெயர்ந்து பேர்கன் நகர் வந்திறங்கினார். பொறியியல் கல்வியில் தேர்ச்சி பெற்று அத்துறையில் ஓய்வூதிய காலம் வரை பணிபுரிந்தார்.*

*இவரைப் போன்ற பேர்கன் வாழ் தமிழர்களால் உருவாக்கப்பட்ட தமிழர் சங்கம், தமிழர் விளையாட்டுக் கழகம், சிறுவர் நல்வாழ்வு நிதிக்குழு, தமிழ் சிறுவர் பாடசாலை, தமிழர் புனர்வாழ்வுக்கழகம், தமிழர் ஒருங்கிணைப்புக்குழு, தமிழ் கத்தோலிக்க ஒன்றியம் போன்ற பொது நிறுவனங்களில் இணைந்து தம்மால் இயன்றவரை தாய் நாட்டுக்காகவும், பேர்கன் நகருக்காகவும் அர்ப்பணிப்போடு உழைத்தவர்.*

*குறிப்பாக கலை கலாச்சார நிகழ்வுகளில் எவ்வகைப்பளு நிறைந்த வேலைகளாயினும் முன்வந்து நல்மனத்தோடு சிறப்பாக செய்து முடிக்கும் தன்மை கொண்டவர். அவர் செயற்பாடுகளோடு மட்டும் நின்றுவிடாது தனது சிந்தனைக்கு எட்டும் கருத்துக்களை, திட்டங்களை துணிச்சலோடு எச்சபையிலும் முன் வைத்தவர். எவ்வாறான சூழ்நிலையிலும் தளர்ந்து போகாது தனது இறுதி மூச்சு வரை சமூகப் பணியினைத் தொடர்ந்தவர், தான் கற்ற கல்வியியை இளமாணவர்களுக்கும் சிறப்பாய் கற்பிக்கும் ஆற்றலும், மனமும் கொண்டவர். கல்வி, கலை, விளையாட்டு, ஆன்மிகம் போன்ற துறைகளில் எமது சமூகத்து வளர்ச்சிக்காக உழைத்த சகோதரன் றொபேட் டனிசியஸ் தயானந்தன் அவர்களது ஆன்மாவுக்கு தலை வணங்கி நிற்கிறோம். □*

# இன்னும் பலகாலம் வாழ்ந்திருக்க வேண்டியவர் தவேந்திரன்



## ஒரு நட்பின் வலி....

—சஞ்சயன் செல்வமாணிக்கம்—

*மரணத்துடனான நெருக்கம் அற்றுப்போகும் போதெல்லாம், "நான் இருக்கிறேன்" என்று மரணம் தன்னிருப்பை எனக்குக் காண்பிப்பது வழமை. தாமதிக்க முடியாத அழைப்பு மரணம். அது தன் வருகையை அறிவிப்பதில்லை. நாமும் அவ்வறிவிப்பை விரும்புவதில்லை. அதனால்தான் அது எப்போதும் அதிர்ச்சியைத் தந்துகொண்டே இருக்கிறது.*

*பல ஆண்டுகளுக்கு முன் மரணத்தை வலிந்து வலிந்து அழைத்த தோழனையும் பெற்றிருந்தேன். மரணம் வலிந்து அழைத்துக்கொண்ட தோழமையையும் இப்போது பெற்றிருக்கிறேன். காலம் நியாயமற்றது என்ற நிராதரவான, கையறு நிலை உணர்வைத் தரக்கூயது மரணம். வாழ்வின் வலிமிகுந்த கணங்களும் அதுதான். அவற்றைக் கடந்துகொள்ளும் வரையில் அது மிகவும் கனதியானது. "இதுவும் கடந்துபோகும்…" என்பதுதான் பெரும் ஆறுதல்.*

*ஒஸ்லோவுக்கு குடிபெயர்ந்த காலத்தில் நண்பர்கள் என்று எவரும் இருக்கவில்லை. 2013ஆம் ஆண்டு நோர்வே தமிழ்ச் சங்கத்தின் நிகழ்வொன்றில்தான் முதன் முதலாகத் தவேந்திரனைச் சந்தித்தேன். மனிதர்களிடம் கண்ணுக்குத் தெரியாதவொரு அலைவரிசை இருக்கிறது என்று நம்புபவன் நான். அவ்வலைவரிசை எனது மனதின் அலைவரிசையுடன் இணையவில்லை என்றால், அதனை மனது உடனேயே உணர்ந்துகொள்ளும். நானும் அதற்கேற்றவாறு நடந்துகொள்வேன். காலத்திடம் விழுந்தெழும்பிக் கற்றுக்கொண்ட பாடம் இது.*

*தவேந்திரனைப் பார்த்தவுடனேயே பிடித்துப்போயிற்று. கனிவான முகமும், சிநேகமான சிரிப்பும், பேரமைதியுடைய தன்னடக்கமும் கொண்டவர். அதிகம் பேசமாட்டார். ஆயிரம் முட்டையிட்ட ஆமையைப்போன்று ஆர்ப்பாட்டமில்லாத, உன்னதமாக மனம் அவருக்கிருந்தது. எமக்கு, காலம் தன் வலையைப் பின்னியிருந்தது. வாழ்வு எம்மிருவரையும் பல ஆண்டுகள் இணைக்கப்போகிறது என்பது புரியாமல் முதலாவது நாளே இருவரும் அதிகம் உரையாடிக்கொண்டிருந்தோம்.*

*எம்மை இணைப்பதற்குக் காலம் போடும் இன்னொரு புதிராக, 2013 இல் நான் இடம்பெயர்ந்தபோது, அது தவேந்திரனின் வீட்டுக்கு அருகாமையில் அமைந்திருந்தது. அதுமட்டுமல்ல, எனது மகள்களின் வயதில் அவரது இரண்டு மகள்கள் இருந்தார்கள். நான் என் குழந்தைகளைப் பிரிந்து மன அயர்ச்சியுடன் அலைந்த நாட்களில், தன் குழந்தைகளை, என் குழந்தைகள்போல் கண்டு, பேசி, உரையாடி, விவாதித்து, தனகி, விளையாடி, வழிகாட்டி மகிழ்ந்திருக்க அனுமதித்தவர் அவர்.*

*தனிப்பட்ட முறையில் நாம் இருவரும் வெவ்வேறு திசையில் பயணிக்கும் பயணிகள். இருவருக்கும் தொடர்பே இல்லை என்றே சொல்லவேண்டும். அவரது பொழுது போக்குகளில் எனக்கு ஆர்வம் இல்லை. கலை, இசை, தொழில்நுட்பம், வாகனம் திருத்துதல், கணினியில்*

*தொழில்நுட்ப வரைபுகளைச் செய்தல், வீட்டைத் திருத்துதல் என்று பல்துறை ஆர்வலர் அவர். எனது பொழுதுபோக்குகளான வாசிப்பு, புகைப்படக்கலை, நடை ஆகியவற்றில் அவருக்கு ஆர்வம் இல்லை. ஆனால், கடந்த ஒன்பது வருடங்களில் நாம் சந்தித்துக்கொள்ளாத நாட்களை இலகுவாக எண்ணிவிடலாம். இருவருக்கும் தன்னார்வலச் செயற்பாடுகளிலும் சமூகம் சார்ந்த, மற்றும் தாயகம் சார்ந்த நடவடிக்கைகளில் இருந்த ஆர்வமுமே எம்மை நண்பர்களாக்கி இயக்கியது.*

*நானோ கோபத்தின் உடன்பிறப்பு. அவரோ சாந்தத்தின் மறுவடிவம். நான் சினத்தின் உச்சியில் நின்று காட்டுக்கத்து கத்தியபொழுதிலும், நாம் கருத்து வேறுபாடுகளைக் கொண்டபொழுதிலும் நட்பினை ஒருபோதும் உதறித்தள்ளாதவர். 2013 தொடக்கம் தொடர்ச்சியாக ஒன்பது ஆண்டுகள் தமிழ்ச் சங்கத்தின் நிர்வாகத்தில் இயங்கி வந்திருக்கிறோம். தலைவராகவும், உப தலைவராகவும், நிர்வாகசபை உறுப்பினராகவும் தமிழ்ச் சங்கத்தின் இன்றைய வளர்ச்சியில் தவேந்திரனின் பங்கைத் தவிர்த்துவிட்டுப் பேசவே முடியாது. அத்தனை பெரும் உழைப்பைக் கொட்டியிருக்கிறார் அவர். அவரது அர்ப்பணிப்பு, செயற்பாடுகள், கரிசனம், செலவிட்ட நேரம், உழைப்பு ஆகியவற்றை அறிந்தவர்களுக்கு இது நன்கு புரியும். அதிலும், மற்றையவர்களை விட நான் அருகிருந்து கண்டிருக்கிறேன்.*

*அவர் யாழ்ப்பாணம் அரியாலையைச் சேர்ந்தவர். அரியாலை மக்கள் மன்றம் - நோர்வே, அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் - நோர்வே ஆகிய நிறுவனங்களை ஸ்தாபித்தவர்களில் ஒருவர். சர்வதேச ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பொருளாளராகவும்,* Asker og Bærum *தமிழ்ச் சங்கத்தின் தலைவராகவும், நிர்வாக உறுப்பினராகவும் இருந்திருக்கிறார். இவை தவிர, தாயகத்தில் இயங்கும் பல நிறுவனங்களின் திட்டங்களுக்கு அளவற்ற பொருளுதவியும், தன்னாலான பங்களிப்பையும் இறுதிவரை செய்து வந்துள்ளார்.*

*விமானத் தொழில்நுட்பத்துறையில்* Hydraulic *பகுதியில் சிறப்புத்தேர்ச்சி பெற்று,* Hydraulic *பொருட்களுக்கு பிரபல்யமான* Parker Hannifin *நிறுவனத்தில் பல ஆண்டுகளாக உயர் தொழில்நுட்ப அதிகாரியாகத் தொழில்புரிந்தவர். யாழ்.பல்கலைக்கழகத்தில்* Hydraulic *துறைக்கு பயற்சி அளிப்பதற்கான பல உயர்தொழில்நுட்ப இயந்திரங்களை சில ஆண்டுகளுக்கு முன் இலங்கைக்கு அனுப்பியிருந்ததோடு, தாயத்திற்குச் செல்லும்போது பல்கலைக் கழகத்தில் பயிற்சிப் பட்டறைகளையும், தொழில்நுட்ப அறிவுப்பரிமாற்றங்களையும் செய்திருக்கிறார்.*

*நூலக நிறுவனத்தின் "ஊர் ஆவணப்படுத்தல்" திட்டத்தின் கீழ் அரியாலையை ஆவணப்படுத்தும் திட்டத்திற்கு பல நாடுகளில் இருந்து உதவிய அனைவரையும் எனக்கு அறிமுகப்படுத்தி, அத்திட்டத்தினைச் சாத்தியமாக்க உதவியவர். பல வருடங்களாக ஒஸ்லோ முருகனின் தீர்த்த நிகழ்வின்போது குளத்தினுள் பந்தல் இடுவது இவரது பணியாகவே இருந்திருக்கிறது. இறைபக்தி இல்லாத என்னை "வாங்க சஞ்சயன், வாங்க" என்று ஆண்டுதோறும் அழைத்துச்செல்வார்.*

*தன் குடும்பத்தைவிட சமூகத்தைப்பற்றி அதிகம் சிந்தித்தவர் என்பேன் நான். கடந்த ஒன்பது வருடங்களாக ஏறத்தாழ தினமும் மாலைநேரங்களில் பல மணிநேரங்களை நாம் ஒன்றாகவே கழித்திருக்கிறோம். அப்பொழுதுகளில் பொதுவேலைகள், தன்னார்வலத் தொண்டுகள், எமது கனவுத்திட்டங்களைப்பற்றியே அதிகம் பேசியிருப்போம்.*

*அற்புதமான, மனிதநேயம் கொண்ட, தன் சமூகம்மீது பெரும் பற்றையும், செயலையும் காண்பித்த, முன்னுதாரணமான மனிதன் விடைபெற்றுக்கொண்ட செய்தி வந்தது.*

*காலம் எனக்குப் பரிசளித்த அன்பான, பண்பான, மறக்கவே முடியாத அற்புதமான மனிதர் தவேந்திரன்.*

*மரணத்துடன் சமரசமாவதைவிட வேறு எதையும் செய்ய முடியாதல்லவா? ஆனால், நினைவுகள் அப்படியல்ல, எப்போது வேண்டுமானாலும் அவற்றை உயிர்ப்பித்துக்கொள்ளலாம்.* □




-அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார்-

**மன்னாரின் கலைமுகவரியாகத் திகழ்ந்த கலைஞர் குழந்தை அவர்கள்**

*"கலைஞர் குழந்தை" என்றும் "குழந்தை மாஸ்ரர்" என்றும் அறியப்படும் மன்னார் முருங்கனைச் சேர்ந்த திரு. செபஸ்தியான் செபமாலை அவர்கள் கடந்த 08.01.2022 அன்று இரவு தன் கலைவாழ்வில் இருந்து விடைபெற்று இறையடி சேர்ந்தார். இவர் மன்னாரின் கலைமுகவரியாகவும், ஈழத்தில் நன்கு அறியப்பட்ட கலைஞராகவும் திகழ்ந்தவர். இவர் 1940ஆம் ஆண்டு பங்குனி மாதம் எட்டாம் திகதி முருங்கனில் ஒரு கலைக்குடும்பத்தில் பிறந்தார். இவருடைய அன்பு மகன்தான் அருட்திரு. அன்புராசா அடிகளார். யாழ்ப்பாணம் கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் 1958 - 1959 வரை கல்விகற்று பயிற்றப்பட்ட ஆசிரியராக வெளியேறினார். தம் ஆசிரியப் பணியை 40 ஆண்டுகள் செய்து ஓய்வுபெற்றார்.*

**பன்முக ஆளுமை கொண்டவர்**

*இவர் கலைத்தாயின் பன்முகத் தன்மைகளை தன்னகத்தில் தாங்கிய ஒரு கலைச்சிற்பி. இவர் சிறந்த குரல்வளமுள்ள பாடகர், சிறந்த மேடைப்பேச்சாளர், நாடக நடிகர், நாடக எழுத்தாளர், நாடக நெறியாளர், பாடலாசிரியர், இசையமைப்பாளர், கவிஞர், கலைஞர், பேச்சாளர் என கலை இலக்கியத் துறையில் பன்முக ஆளுமையைக் கொண்டு விளங்குகின்றார். தனது விடாமுயற்சியாலும், தொடர் பயிற்சியாலும், அர்ப்பணிப்பாலும் இத்திறமைகளை அவர் வளர்த்துக்கொண்டார். கலைசார்ந்த ஆளுமையைவிட இவர் சமய வாழ்விலும் சமூக அரசியல் வாழ்விலும் காத்திரமான பங்கு வகித்துள்ளார். உத்தம கத்தோலிக்க விசுவாசியாக, சமூக செயற்பாட்டாளராக இவர் சமயத்திற்கும் சமூகத்திற்கும் பணியாற்றிவந்துள்ளார்.*

**பேராசிரியர் வித்தியானந்தனோடு தொடர்பு**

*1965களில் மன்னார் மாதோட்டத்தில் நாடக விழாக்கள் நடந்தேறிய பொற்காலம் எனலாம். இக்காலத்தைப்போல வேறு எக்காலத்திலும் இதுவரை நாடக விழாக்கள் நடக்கவில்லை. இக்காலத்தில் பேராசிரியர் சு. வித்தியானந்தன் நாடக விழாக்களை முன்னெடுக்க மன்னார் அரச அதிபராக இருந்த திரு. தேவநேசன் நேசையா அவர்கள் இவ்வொழுங்குகளுக்குச் செயல்வடிம் கொடுத்தார்.*

*இச்சூழலில்தான் பேராசிரியர் சு. வித்தியானந்தன் குழந்தை செபமாலை அவர்களையும் அவரின் முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தையும சந்தித்தார். இதன் விளைவாக யாழ்ப்பாணம், துணுக்காய், பளை, மட்டக்களப்பு, கொழும்பு எனப் பல பாகங்களுக்கு கலைஞர் குழந்தை அவர்களையும் முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தினரையும் அழைத்து நாடகங்களை ஆற்றுகை செய்தார்.*

*இவர் சிறுவனாக வளந்த முருங்கன் கிராமச்சூழல் இவருக்கு கூத்து நாடகத்தின்மேல் ஈர்ப்பை ஏற்படுத்தியது. பள்ளிக்காலம், ஆசிரியப் பயிற்சிக்காலம் ஆகியவற்றில் இவருடைய கலையார்வம் அதிகரித்தது. இவர் மன்னார் மாதோட்டத்தைச் சேர்ந்த நாடகக் கலை முன்னோடியாக இருப்பினும் மன்னார் மாதோட்டத்தைக் கடந்து இலங்கை நாடு அறிந்த ஒரு கலைஞராகத் திகழுகின்றார். மன்னாரில் எங்கெங்கு பொது விழாக்கள் நடக்கின்றனவோ அங்கெல்லாம் தம் இசையால், நடிப்பால், குரல்வளத்தால் நிகழ்வுகளைச் சிறப்பிக்கின்றவர்.*

**முத்தமிழ் கலாமன்றம்**

*கலைஞர் குழந்தை அவர்கள் 1961இல் புனித இயாகப்பர் நாடக மன்றம் என்ற அமைப்பை உருவாக்கினார். அதன்பின் கலை ஆர்வமுள்ள அனைவரையும் இணைத்துக்கொள்ளும் நோக்கோடு மேற்சொன்ன மன்றத்தின் பெயரை இன, மத வரையறைகளைக் கடந்து "முருங்கன் முத்தமிழ் (நாடக) மன்றம்" என 1964இல் உருமாற்றினார். இம்மன்றத்தின் ஐம்பதாவது ஆண்டு (1964 - 2014) பொன்விழா கடந்த 2014ஆம் ஆண்டு முருங்கனில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. ஐம்பது ஆண்டுகளைக் கடந்தும் இன்றுவரை இம்மன்றம் இயங்குநிலையில் செயற்பட்டுக்கொண்டு இருக்கின்றது. இம்மன்றத்தின் தாபகத் தலைவர் கலைஞர் குழந்தை அவர்கள் இம்மன்றத்தின் ஊடாக பல்வகையான கலைப்படைப்புக்களை உருவாக்கி மேடையேற்றியுள்ளார். முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தின் பொன்விழா மலரில் இம்மன்றம் பற்றிய பல கட்டுரைகள், மன்ற உறுப்பினர்களுடைய அனுபவப் பகிர்வுகள் இடம்பெற்றுள்ளன. இப்பொன்விழா மலர் 100 பக்கங்களைக் கொண்ட சிறப்பான ஆவணப் பதிவாக அமைக்கப்பட்டுள்ளது.*

**கலைப் படைப்புக்கள்**

*இவர் சுமார் 70 நாடகங்களையும், 90 கல்வெட்டுக்களையும், 100 இற்கும் மேற்பட்ட பல்துறைப் பாடல்களையும் எழுத்துப் பிரதிகளாக இன்றும் வைத்திருக்கின்றார். இவருடைய பல்துறைப் பாடல்களில் கும்மி, கோலாட்டம், வரவேற்புப் பாடல்கள், பிரியாவிடைப் பாடல்கள், வாழ்த்துப்பாக்கள் போன்றவை அடங்கும்.*

*இவர் எழுதிய நாடகங்களுள் கூத்து நாடகங்கள், இசை நாடகங்கள், சமூக விழிப்புணர்வு நாடகங்கள் போன்றவை அடங்கும். ஏறக்குறைய ஒரு மணித்தியாலங்களைக்கொண்ட பல குறுங்கூத்துக்களை எழுதியுள்ளார். விவிலியம், தமிழ் இலக்கியம், வரலாறு போன்றவற்றில் இருந்து நாடகங்களுக்கான பாடுபொருளை தெரிவுசெய்து சமூக வாழ்வுக்கு படிப்பினையாக அவற்றை உருவாக்கி ஆற்றுகை செய்வார்.*
*கல்சுமந்த காவலர்கள், வீரத்தாய், யார் குழந்தை, இறைவனா புலவனா?, வீரனை வென்ற தீரன் போன்ற கூத்து நாடகங்கள் பல நூறு மேடைகள் கண்ட அழியாப்புகழ்கொண்ட படைப்புக்களாகும்.*

**இவர் படைத்த நூல்கள்:**

இவர் ஒருசில நூல்களையும் வெளிக்கொணர்ந்துள்ளார். அறப்போர் அறைகூவல் (1966), இன்பத்தமிழின் இதய ஓலம் (1966), இயாகப்பர் இன்னிசைப் பாடல்கள் (1966), நாம் மலர் - I (1967), நாம் மலர் - II (1989), பரிசுபெற்ற நாடகங்கள் (1997), மரபுவழி நாடகங்கள் (1998), மாதோட்டம் கவிதைத் தொகுதி (2000) ஆகியனவாகும்.

**இவரைப்பற்றி எழுந்த நூல்கள்:**

கலைஞர் குழந்தை அவர்களின் 50 ஆண்டுகால சமய, சமூக, கலைப் பணிகளை ஆவணப் படுத்தும் நோக்குடன் கலைத்தவசி-2012 (குழந்தை செபமாலை அவர்களின் கலைப்பணி நயப்பு மலர்) என்ற நூல் வெளிக்கொணரப்பட்டது. இந்நூல் இவருடைய அன்பு மகன் அருட்திரு. செ. அன்புராசா அவர்களின் முயற்சியின் பயனாக உருவாகிய ஒரு படைப்பாகும். இந்த நூல் 296 பக்கங்களைக்கொண்ட மிகப்பெரும் ஆவணம். இதில் ஐந்து சமயத் தலைவர்களின் ஆசியுரைகள், நான்கு சமயத் தலைவர்களின் வாழ்த்துரைகள் அடங்கலாக 58 பேருடைய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. கலைஞர் குழந்தை அவர்களுடைய கலையுலக வாழ்வின் பதிவுகள் இதில் இடம்பெற்றுள்ளன. அவருடனான தமது அனுபவங்களை, அவர் பற்றிய தமது மனப்பதிவுகளை ஒவ்வொருவரும் தத்தமது கண்ணோட்டத்தில் பதிவு செய்துள்ளனர். ஆளுமைமிக்க ஓர் அற்புதமான கலைஞனின் வாழ்வின் சுவடுகளைச் சுமந்து நிற்கும் ஓர் வரலாற்று ஆவணம் இந்த கலைத்தவசி மலர்.

கலைஞர் குழந்தை அவர்களும் அவருடைய துணைவியார் திருமதி. றோஸ்மேரி அவர்களும் 2009 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டிற்குப் பயணம் செய்த வேளையில் பிரான்ஸ் தமிழ் கலைஞர்களால் “கூத்திசைக்காவலர் - மன்னார் பெற்றெடுத்த குழந்தை செ. செபமாலை” என்ற பெயரில் சிறப்பு மலர் பிரான்ஸ் நாட்டில் வெளியிடப்பட்டது. 56 பக்கங்களைக்கொண்ட இந்நூலில் 32 பேருடைய மனப்பதிவுகள் சிறு கட்டுரைகளாக, கவிதைகளாக பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**விருதுகள்/ கௌரவங்கள்**

கலைஞர் குழந்தை அவர்கள் பல விருதுகளுக்கு சொந்தக்காரர்.

1968ஆம் ஆண்டு பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் குழந்தை செபமாலை அவர்களுக்கு “கவிஞர் குழந்தை” எனப் பட்டம் சூட்டி கௌரவித்தார். 1982ஆம் ஆண்டு ஆடி மாதம் 22ஆம் திகதி முருங்கன் பாடசாலை அபிவிருத்திச் சபையால் இவருக்கு மிகப்பெரும் பாராட்டு விழா எடுக்கப்பட்டது. அன்றைய மன்னார் ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் இவருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்ததோடு “கலைஞர் குழந்தை” என்ற கௌரவப் பட்டத்தையும் வழங்கினார். 1994ஆம் ஆண்டு மன்னார் மாவட்டக் கலை பண்பாட்டுக் கழகத்தினால் முள்ளிக்குளத்தில் முன்னெடுக்கப்பட்ட நாடகப் போட்டி நிகழ்வின்போது கலை பண்பாட்டுக் கழகத்தினர் குழந்தை செபமாலை அவர்களுக்கு “முத்தமிழ் வேந்தன்” என்ற பட்டத்தை வழங்கினர்.

1999ஆம் ஆண்டு இலங்கை கலாசாரத் திணைக்களத்தினால் இவர் “கலாபூசணம்” விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். 2000ஆம் ஆண்டு வடக்கு கிழக்கு மாகாண இலக்கிய விழாவின்போது “ஆளுனர் விருது” வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

மன்னார் நகரமண்டபத்தில் 02.09.2000 அன்று நடைபெற்ற நாடக நிகழ்வின்போது கலைஞர் குழந்தை அவர்கள் மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களால் “திருக்கலை வேந்தன்” என்னும் பட்டம் அளிக்கப்பட்டு, பொற்கிளி வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

10.06.2005ஆம் ஆண்டு கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட உலக நாடக தின விழாவில் இவர் “தலைக்கோல் விருது” வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். 18.08.2009இல்

பாரிஸ் கலைஞர்களால் நடாத்தப்பட்ட பாராட்டு விழாவின்போது ஐரோப்பிய தமிழ் கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தினால் "கூத்திசைக் காவலர்" என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

15.02.2013ஆம் ஆண்டு இலங்கைக் கலைக் கழகத்தினால் நடாத்தப்பட்ட 2012 - 2013ஆம் ஆண்டு அரச நாடக விழா நிகழ்வு கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றபோது இவர் கலை கலாசார அமைச்சர், இலங்கை கலைக்கழகத் தலைவர், அரச நாடக விழாக் குழுத் தலைவர் முன்னிலையில் "நாடகக்கீர்த்தி" என்ற உயர் விருதும் ஐம்பது ஆயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இந்நிகழ்வில் சிங்கள நாடகக் கலைஞரில் ஒருவரான கலைஞர் சந்துல குணரட்ன அவர்களும் தமிழ் நாடகக் கலைஞரில் ஒருவரான கலைஞர் குழந்தை அவர்களும் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

07.09.2014ஆம் ஆண்டு வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் தமிழரசுக் கட்சியின் 15வது தேசிய மாநாட்டில் தமிழ்த்தேசியத்திற்காக உழைத்த பெருந்தகைகளுக்கு வழங்கப்பட்ட தந்தை செல்வா விருது தமிழரசுக் கட்சியினால் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.



**அர்ப்பணம் மிகுந்த கலைஞர்**

தான் பணியாற்றிய இடங்களில் ஆசிரியப் பணியுடன் சமூகப்பணி, சமயப் பணி, தமிழ்ப்பணி போன்றவற்றில் இளமைக்காலம் தொடக்கம் இடைவிடாமல் 60 ஆண்டுகளாக உழைத்து வந்தவர்.

நல்லாசிரியராக, ஆற்றல்மிகு கூத்துக்கலைஞனாக, சிறந்த சமூக, இலக்கிய, விவிலிய நாடக இயக்குனராக, சமூக ஈடுபாடுள்ளவராக, இலக்கிய ஆர்வலராக, தான் வாழ்ந்த சமூகத்தின் கல்வி முன்னோடியாக, விசுவாசமான கத்தோலிக்கராக இவர் தமது வாழ்வை அர்ப்பணித்தவர். மொழிப்பற்றும், இனப்பற்றும், சமயப்பற்றும் இவருடைய படைப்புக்களில் இழையோடி இருக்கும்.

சமய, சமூக, கலைப் பணிகளை கடந்த 50 ஆண்டுகளாக அர்ப்பணிப்போடு ஆற்றிவந்த இவர் உண்மையில் ஒரு வாழ்நாள் சாதனையாளர்தான்! இவருடைய அர்ப்பணிப்பும் தியாகமும் அளவிட முடியாதவை. பொருளாதாரச் சுமை, உடல் நோய்கள், மற்றவர்களின் ஒத்துழைப்பின்மை போன்ற சவால்கள் மத்தியில் அவர் கலையை வளர்த்தார்.

அவருடைய விசுவாச வாழ்வு பலரும் மெச்சத்தக்க சாட்சிய வாழ்வாய் அமைந்திருந்தது. அவர் திருச்சபைப் பணிகளில் தன்னை ஈடுபடுத்தி வந்தார். திருச்சபையின் பணியாளர்களுக்கு உதவியாகவும், ஒத்தாசையாகவும் இருந்தார். திருச்சபையின்மேல் அவருக்கிருந்த அன்பு, அக்கறை, காரணமாக தன் பிள்ளைகளில் ஒருவரை குருத்துவ வாழ்வுக்கு வழிநடத்தினார்.




# கொரோனா செய்திகள்....

*16 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கொரோனா தடுப்பூசி போடுவதற்காக பெர்கன் நகராட்சி 36 மருந்தகங்களுடன் ஒப்பந்தம் செய்துள்ளது.*
*ஜனவரி 17, 2022 திங்கட்கிழமை முதல் மருந்தகங்கள் கோவிட்-19 க்கு எதிராக தடுப்பூசி போட ஆரம்பித்துள்ளது.*

*ஏற்கனவே பெற்றுக் கொண்ட தடுப்பூசிகளின் இடைவெளிகளை பூர்த்தி செய்துள்ள பட்சத்தில் தொடர் தடுப்பூசியினை பெற்றுக் கொள்ளலாம். எவ்வகையான தடுப்பூசி என்றாலும் (1ம், 2ம்,3ம்) ஊசிகளை எந்த மருந்தகத்திலும் பெற்றுக் கொள்ளலாம். தடுப்பூசியை இலவசமாக பெற்றுக் கொள்ளலாம்.*

---

*கடந்த 24 மணி நேரத்தில் 24,958 புதிய கொரோனா தொற்றியுள்ளது, தொடர்ந்து நான்காவது நாளாக, நோர்வேயில் புதிய தொற்று உச்சநிலையில் உள்ளது.*

*இது முந்தைய நாளை விட 8081 அதிகமாகவும், கடந்த வாரம் இதே நாளை விட 12,598 அதிகமாகவும் உள்ளது. கடந்த ஏழு நாட்களில் சராசரியாக ஒரு நாளைக்கு 14,328 கொரோனா தொற்றுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.*

*- ஓமிக்ரான் மாறுபாடு அதிக பரவல் தன்மையைக் கொண்டிருப்பதால், நோய்த்தொற்று விகிதங்கள் வேகமாக அதிகரிக்கும் காலகட்டத்தில் நாம் இப்போது இருக்கிறோம். இப்போது வரவிருக்கும் சில காலத்திற்கு நோய்த்தொற்று விகிதங்கள் அதிகரித்து வருவதையும் நாம் பார்க்கலாம் என சுகாதார பணியக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.*

நோர்வே நாட்டிலிருந்து வெளி நாடுகளுக்கு பயணிப்பவர்களும், வெளிநாடுகளிலிருந்து நோர்வேயுக்குள் பயணிப்பவர்களும் அரசினது சில முக்கிய விதிகளினை பின்பற்றுதல் மிகவும் அவசியமாகும்.
நோர்வே நாட்டிலிருந்து வெளி நாடுகளுக்கு பயணிப்பவர்கள்:
பயணம் செய்வதற்கு 24 மணி நேரத்துக்கு முன்பு கொரோனா பரிசோதனை செய்து எதிர்மறை முடிவு படிவத்தினை காண்பித்தல் அவசியம்.
எதிர்மறை சோதனையானது நோர்வே, ஸ்வீடிஷ், டேனிஷ், ஆங்கிலம், பிரஞ்சு அல்லது ஜெர்மன் மொழிகளில் சான்றிதழுடன் ஆவணப்படுத்தப்பட வேண்டும்.
முழுமையான தடுப்பூசி பெற்றுக் கொண்டதற்கான ஆவணம் காண்பித்தல் அவசியம்..

வெளிநாடுகளிலிருந்து நோர்வேயுக்குள் பயணிப்பவர்கள்:
பயணம் செய்வதற்கு 3 நாட்களுக்கு முன் PCR பரிசோதனை எடுத்து கொண்டு எதிர்மறை முடிவினை விமான நிலையத்தில் காண்பித்தல் அவசியம்.
முழுமையான தடுப்பூசி பெற்றுக் கொண்டதற்கான ஆவணம் காண்பித்தல் அவசியம்.
நோர்வேக்கான நுழைவு பதிவினை பதிவு செய்தல் வேண்டும்.
16 வயதுக்கு மேற்பட்ட பயணிகள் நோர்வேக்கு வருவதற்கு முன் தங்கள் நுழைவை பதிவு செய்ய வேண்டும். பயணத்திற்கு 72 மணிநேரத்திற்குள் பதிவு செய்யலாம்.
பதிவு செய்ய உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், அழைப்பு மையத்தை +47 33 41 28 70 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும் அல்லது support@entrynorway.no என்ற மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.
நுழைவுத் தனிமைப்படுத்தல்:
நோர்வேயுள் வருகைக்குப் பின்னர் 10 நாட்களுக்கு உள்ளே தனிமைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். 3 நாட்களுக்குப் பின்னர் எடுக்கப்பட்ட எதிர்மறை PCR சோதனை மூலம் நுழைவுத் தனிமைப்படுத்தலைக் குறைக்கலாம்.

# உயிரோடு உறவாடு

வாசகர் உடல் - உளம் சம்பந்தமான கேள்விகளும் மருத்துவரின் பதில்களும்

Dr. விமலநாதன் MD PhD (Senior Consultant Cardiologist, Oslo, Norway)



**எனக்கு 2021 நடுப்பகுதியில் covid 19 தொற்று நோய் ஏற்பட்டது. அதன் பின்னர் 6 மாதங்கள் ஆகியும் எனக்கு உடல் சோர்வும், மாத விடாய் நாட்களில் அதிக வலியாகவும் உள்ளது. இது தொடர்ச்சியாகவே இருக்கப் போகிறதா என்ற பயம் என்னுள் எழுந்துள்ளது. இதற்கு மருத்துவம் எதுவும் செய்ய முடியாதா?**

*கொரோனா தொற்றுத் தொடர்பாக ஆரம்பத்தில் இருந்ததிலும் பார்க்க இப்போது மருத்துவத்துறையினரின் அனுபவம் அதிகரித்துள்ளது. அந்த வகையிலே கடந்த இரண்டு வருட அனுபவங்களிலிருந்து சில விடயங்களை எடுத்துச் சொல்லலாம். கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டவர்கள் அதிலிருந்து மீண்டவர்கள் ஒவ்வொருவருக்கும் வேறுபட்ட அனுபவங்கள் கிடைத்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. சிலர் தொற்றினால் பெரும்பாதிப்புக்கள் எதுவுமின்றி இலகுவாக சுகமடைகிறார்கள். தொற்றினால் கடுமையாக பாதிக்கப்பட்டவர்கள் சிலர் தன்னம்பிக்கையிழந்து மனச்சோர்வு, மனவுளைச்சலுக்கு உள்ளாகியிருப்பதையும் அவதானிக்க முடிகின்றது. சிலருக்கு சுவாசத்தொகுதியுட்பட உடலுறுப்புக்களில் ஏற்பட்ட தாக்கத்தாலும், மாறுதல்களாலும் உடல் வலுவிழந்து, சோர்வடைந்து காணப்படுகின்றார்கள். இதனை ஆங்கிலத்தில் Long Covid Symptoms என அழைக்கின்றார்கள். இவ்வாறான நிலையை ஒரு மாத்திரையை உட்கொள்வதன் மூலமோ அல்லது ஒரு ஊசி போடுவதன்மூலமோ குணப்படுத்த முடியாது.*

*மனதைத் திடப்படுத்தி, பலவீனமடைந்துள்ள செயற்பாடுகளை இனங்கண்டு விடாப்பிடியாக தொடர்ச்சியான உடற்பயிற்சி செய்து உடல்வலிமையை திரும்ப பெற்றுக் கொள்வதன் மூலம் தன்னம்பிக்கையை மீளப்பெறுவது முதற் படிக்கட்டாகும். இது ஓரிரு நாட்களிலோ அல்லது ஓரிரு வாரங்களிலோ நடந்துவிடப் போவதில்லை. எனவே நீண்டகால நோக்குடன் மனந்தளராது உழைத்து வெற்றிபெற வேண்டும். மனத்திடமும், உடல்வலிமையும் பெற்றுவிட்டால் மிகுதியெல்லாம் தானாகவே அகன்றுவிடும். எனவே இதை ஒரு சவாலாக எடுத்து உங்கள் முயற்சியால் வெற்றிபெறுவதன் மூலம் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாகவும் இருக்க முடியும்.*

**முதலாம் கொரோனா தடுப்பூசியினை பெற்றுக்கொண்டதுக்கு பின்னர் விலா எலும்புகளில் நோவு இருக்கிறது. அதனால் தொடர்ந்து தடுப்பூசி எடுக்க மிகவும் பயமாக உள்ளது. கொரோனாவுக்கும் பயமாக உள்ளது. இது பற்றி உங்கள் ஆலோசனை தர முடியுமா?**

*தடுப்பூசி போட்டபின்பு நீண்டகாலத்திற்கு இவ்வாறு நோ இருப்பது சாத்தியமில்லை. எனவே தாமதமின்றி அடுத்த தடுப்பூசியை போடுவதே சிறந்தது. ஓமிக்கொரோன் தொற்றினால் மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்டு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப் படுபவர்களில் 80 வீதமானவர்கள் தடுப்பூசி போட்டுக் கொள்ளாதவர்கள் என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.*




வசந்தின் ஐம்பதாவது பிறந்தநாளுக்கு என்ன பரிசு கொடுக்கலாம் என மண்டையைக் கசக்கியதில் மணிக்கூடு தெரிவானது.

ஒவ்வொரு கொண்டாட்டங்களின் போதும் எங்களுக்கு இது பெரும் போராட்டமாக இருக்கிறது. எமது அன்பிற்குரியவர்களுக்கு அன்பளிப்பு வழங்கும்போது அவர்களுக்கு பிடித்தமான பொருளை தேர்வு செய்வதில் நிறைய நேரத்தை செலவு செய்ய நேர்கிறது. முடியாத போது பணத்தைக் கொடுத்துவிட்டு வருகிறோம். பணத்தைக் கொடுப்பது சுலபமான அலுவல். அவர்களும் தங்களுக்குப் பிடித்தமானதை வாங்கிக்கொள்ளலாம். உண்மைதான். ஆனாலும் அன்பளிப்பு பொருளுக்கு பணம் ஒருபோதும் ஈடாகாது.
சிலவேளைகளில் அவர்களுக்கு பணம் கொடுப்பது சங்கடத்தையும் தரலாம்.

மணிக்கூடு நல்லதேர்வுதான். வாழ்க்கையில் நேரம் எவ்வளவு பெறுமதியானது. கடிகாரத்தை ஒருவர் அன்பளிப்புச் செய்யும் போது பெறுமதிமிக்க நேரத்தை அன்பளிப்பு செய்வதான உணர்வு மேலெழுகிறது. என் மனைவிக்கும் பிடித்துக்கொண்டது.

கடிகாரத்தை இணையவழி தேர்வு செய்து மனைவியிடம் கொடுத்தேன் வாங்கி வைக்கும்படி. மாலை நான் வீடு திரும்பியபோது தாள் அப்படியே மேசையில் கிடந்தது. கடிகாரம் வாங்கப்படவில்லை. எனக்குச் சுருக்கென்றது.

*மனைவி “ரீ போடட்டா?” என்றார்.*
*“இல்லை வேண்டாம்” என்றேன். மூளை முட்டிய கோபத்தை அடக்கியபடி.*
*மனைவி ஏதோ சொல்ல முற்பட்டார். எதையும் காதில் வாங்காது உடனேயே கிளம்ப்பிப்போய் மணிக்கூட்டை வாங்கி வந்தேன்.*
*கடைக்காரரே மிகஅழகாக பார்சல் பண்ணியும் தந்தார். கடிகாரத்தைப் பார்க்க மனைவி ஆசைப்பட்டார்.*

*“திருப்பி இனிப் பிரிச்சுப்பார்சல் பண்ண நேரமில்லை” சற்று கடுமையாகவே சொல்லி வைத்தேன். அவர் அமைதியானார்.*
*வசந் வீட்டுக்கு சென்று அழகிய பார்சலைக் கொடுத்துவிட்டு வந்தோம்.*

*2.*
*வசந்தின் குழந்தைகள் அன்பளிப்புப் பொருட்களை பிரித்துப் பார்ப்பதில் ஆர்வமாய் இருந்தார்கள். அவர்களின் கண்ணில் முதலில் பட்டது அழகிய பார்சல்தான்.*
*பிரித்தார்கள். பெட்டிக்குள் பெட்டியாக பல அடுக்குகளில் பெட்டிகள் காணப்பட்டன. பாஞ்சாலியின் சேலைபோல அவை நீண்டுகொண்டே போயின. குழந்தைகள் பொறுமையிழந்தார்கள். ஆர்வம் அதிகமானது. வசந் தம்பதினருக்கும் கூடவே.*

*கடைசிப் பெட்டியைப் பிரித்தபோது பெட்டி வெறுமையாக இருந்தது. பெட்டியை நாலுபக்கமும் புரட்டிப் புரட்டிப் பார்த்தார்கள். பெட்டியை சிதிலம் சிதிலமாக பிரித்தும் பார்த்தார்கள். ஒன்றுமேயில்லை. அவர்களுக்குப் பெரும் ஏமாற்றமாக இருந்தது. ஒருவருக்கும் வார்த்தைகள் வரவில்லை. ஓ வென்று முகத்தைக் கோணலாக்கி ஆச்சரியத்தோடு ஆளையாள் பார்த்தார்கள்.*

*“அவர் இப்படி ஏமாற்றக்கூடிய ஆள் இல்லை” என்றாள் வசந்தின் மனைவி.*
*“சிலவேளை பகிடி விடுகிறாரோ?” என்றாள் மூத்த மகள்.*
*“அப்பா போன் பண்ணிக் கேளுங்கோ” என்று அவசரப்படுத்தினான் கடைசி மகன்.*
*இதில் ஏதோ தவறு நடந்திருக்கிறது என்று மனதைக் கசக்கினார் வசந்.*

*மற்றப் பார்சல்கள் எதையுமே அவர்கள் பிரிக்கவில்லை. அவர்களுக்கு மனம் வரவில்லை.*
*“இவர் ஏன் பார்சலில் தங்கள் பெயரைப் பதியவில்லை.?”*
*“வழமையாக சிரித்துக் கலகலப்பாக இருப்பவர்கள் ஏன் இன்று முகங்களை ம்மென்று வைத்துக்கொண்டார்கள்?”*
*“எங்களை ஏமாற்றும் அளவுக்கு ஒன்றும் மோசமான ஆட்கள் இல்லையே?”*
*“அவரை அறியாமலே ஏதாவது தவறு நடந்திருக்குமா?”*
*“இதை எப்படி அவரிடம் கேட்பது?”*
*வசந்ததும் மனைவியும் மௌனக்கேள்விகளால் தம்மைத்தாமே குடைந்தெடுத்துக் கொண்டிருந்தார்கள். பிள்ளைகள் சோர்ந்துபோய் விலகிவிட்டார்கள்.*
*ஓர் அன்பளிப்பு, நட்புக்குள் தேவையற்ற இடைவெளியை ஏற்படுத்திவிட்டதாக எண்ணிக் கலங்கினார் வசந்.*
*“உதை பேசாமல் விடுங்கோ ஒன்றும் கேட்கவேண்டாம்” என்றார் வசந்தின் மனைவி*

*3.*
*இன்று கடிகாரக் கடையிலிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது.*
*நான்தான் தொலைபேசியைத் தூக்கினேன்.*
*“அன்பரே நீங்கள் கடிகாரம் வாங்கும்போது ஒரு தவறு நேர்ந்துவிட்டது” என்றார் கடைஊழியர்.*
*“என்ன தவறு?” என்றேன்.*
*“உங்கள் கடிகாரத்தை பார்சல் செய்யும் போது உள்ளே கடிகாரத்தை வைக்கத் தவறிவிட்டோம். சிரமம் பாராது வந்து பெற்றுக் கொள்ளுங்கள்.*
*தவறுக்கு வருந்துகிறோம்! வருந்துகிறோம்!!” என்று பல தடவைகள் மன்னிப்பையும் கோரினார் அவர்.*



படம்: தமயந்தி-

## மழை.

அள்ளிப் பருகிய நீரை
கொப்பளித்துக் கொண்டிருக்கின்றன மேகம்

அது
காற்றில் மோதி தூறலாய் மாறி
நிலத்தில் வீழ்ந்ததும்
ஓட்டம் பிடிக்கிறது
குன்றுகள் குளங்களைத் தேடி

நிரம்பிய நீரில் நீந்தமுடியாமல்
கத்திச் சாகிறது தவளை
அதைக் கொத்திச் செல்கிறது
பருந்து

மழை இருள் கலைக்கப் புறப்பட்ட
மின்மினிப் பூச்சிகள் மரக்கிளைகளில் அமர்ந்து
ஒளியூட்டிக்கொண்டிருக்கின்றன

வேப்பம் பழத்தை உண்டு
கொட்டையை கூரையின் மீது எறிந்து
தாளம் போட்டுக்கொண்டிருக்கிறது வௌவால்

கறையான் பொந்திலிருந்து
வெளிவந்த ஈசல்கள்
மேகத்திற்கு மனுக்கொடுக்கப் படையெடுப்பு
பாவம் பாதியில் அதன்
உயிர் பறிப்பு

இந்த நிலம் மட்டும்
எல்லா அழுக்குகளையும் கழுவி
நிர்வாணமாய் நின்று
சிரித்துக்கொண்டிருக்கிறது. □

## நிலம் விழுங்கும் பேய்கள்

ஆட்களற்ற மனைகளை சூழ்ந்து கொண்ட
வௌவால்களைப் போல
என் நகரத்தையும்
சூழ்ந்துகொண்டன பேய்கள்

மழைநீரைப் புசித்திட போட்டிபோடும்
சிற்பிகள் போல
எங்கள் ஊர்களை
ஒவ்வொன்றாக விழுங்கிக்கொண்டன அவை

அவைகள் தங்களின் குகைகளாக
எங்களின் வீடுகளையும்
கோவில்களையும் பள்ளிகளையும்
ஆட்கொண்டிருந்தன

எங்களில் சிலரை
கைது செய்தும்
இன்னும் சிலரைக் கொன்றும்
எங்கள் நிலங்களிலேயே
புதைத்தன

நாங்கள்
எங்கள் நிலங்களைத் தக்கவைக்கவும்
எஞ்சிய உயிர்களைக் காத்துக்கொள்ளவும்
பதாகைகளையும் துண்டுப்பிரசுரங்களையும்
ஏந்தியபடி
எங்கள் குரல்களை எழுப்பிக்கொண்டிருந்தோம்
நிலம் விழுங்கும் பேய்களுக்கெதிராக.... □

# இல.66 விஷாலினி



**-இதயராசன்-**

இன்று நேற்றல்ல ஐம்பது வருடங்களாக இதே கடலில், இதே படகில் பயணம் செய்கின்றேன். ஆனால் எனக்குச் சொந்தமில்லாத அன்னிய தேசத்தில், முகங்களே தெரியாதவர்களுடன் தனித்து விடப்பட்டவன் போன்ற உணர்வு. ஏழாற்றுப் பிரிவின் நீரோட்டம் படகினை உலுக்குகின்றது. படகு இப்படியே கவிழ்ந்து விடாதா? அல்லது "குமுதினிக்கு" நடந்தது போல ஒரு கொடூரம் நடக்காதா?! என்று மனம் விரும்புகின்றது. நான் நினைத்தால் மட்டும் அது நிகழ்ந்துவிடுமா? அதையும் தாண்டிப் படகு சீராகச் செல்கின்றது.

ஒரு நாளும் இல்லாமல் ஊரின் மீதும், அங்குள்ள மக்கள் மீதும் எதிர்மறைச் சிந்தனைகள் அலை அலையாக மூளையைக் கடுப்பேற்றுகின்றன. அவற்றினை நினைப்பினிலே அழித்துவிடுமாறு சொல்கின்றது புத்தி. இருப்பினும் என்னால் முடியவில்லை. ஏன் நான் என்னையே வெறுக்கின்றேன். எனது மன அழுத்தத்தினைத் தணித்து, ஒரு பறவைபோல் மேலிருந்து பிரச்சினைகளைப் பகுத்தாராய் தூண்டுகின்றது எனது அறிவுக் கண்.

கண்ணுக்கெட்டிய தூரத்தில் பனைங்கூடல்களும், தென்னைஞ் சோலைகளும் சூழ்ந்த எனது தீவு, என்னை வரவேற்பது போன்ற நிர்மலமான உணர்வு மெய்யினைச் சில்லிட வைக்கின்றது. சூடேறியமண்டை குளிர்கின்றது. நான் நானாக யதார்த்தத்தினை எதிர்கொள்ளும் துணிவுடன் நீரலைகளில், நிதானித்துச் செல்லும் படகினை வேடிக்கை பார்க்கின்றேன். கடல் மீன்கள் சிறுவர்கள் போல, உயர உயர எழுந்து குத்துக்கரணம் அடித்து மகிழ்கின்றன. கடற்பறவைகள் அவற்றில் ஒன்றினையாவது தமக்கு இரையாக்கும் அடக்கமுடியாத ஆர்வத்துடன், கடலையும் ஆகாயத்தையும் நோக்கிப் பறந்து வினோதம் புரிகின்றன.

"கிராமத்தின் கலாசாரத்தினை மீறியதுடன், கிராமத்தின் இயல்பு நிலைமைக்கும் ஊறுவிளைவிக்கும் செயலில் ஈடுபட்டுள்ளதால், இக்கடிதம் கண்டவுடன் விசாரணைக்கு வரவும். செயலாளர், பிரதேச சபை" என்பதே எனக்கு நேற்றுக் கிடைத்த கடிதம். எனது தந்தையார் கல்விகற்று அரச உத்தியோகம் பார்த்தவர். கிராமத்தவர்களால் நன்கு மதிக்கப்பட்டவர். அவரின் சொல்லுக்கு மந்திரம் போல் கட்டுண்டனர் ஊர்மக்கள். அவர்களுக்கு வரும் தமிழ் மற்றும் ஆங்கிலமொழியிலான கடிதங்களை வாசித்து, விடயங்களைத் தெளியவைப்பதோடு, பதில் கடிதம் எழுதுவதும் அப்பரின் பொதுத் தொண்டாகவே இறுதிவரை இருந்து வந்துள்ளது,

*ஊர் வழக்கில் சொல்வதானால், பெரியமனிசன் வம்புதும்புக்குப் போகாதவர். ஊரில் நடக்கும் அநீதிகளை, நிர்மலமாக நின்று நிதானித்து நோக்கி, காலத்தால் தீர்வுகிட்டும் என்று மக்களை அமைதிப்படுத்துவார் அப்பர். பின்னர் அவற்றினை உரிய இடங்களுக்கு மனுக்கள் எழுதித் தெரியப்படுத்துவார். சில தருணங்களில் அதிகாரிகள் வந்து சம்மந்தப்பட்டவர்களை விசாரிப்பார்கள். சில சந்தர்ப்பங்களில் அவர்களை எச்சரிக்கை செய்ததுமுண்டு. ஆனால் ஒரு சில மாதங்களில் மீண்டும் எல்லாம் மறக்கப்பட்டு, அநீதிகள் அரங்கேறும். அப்பரின் இந்தச் செயற்பாடு எனக்குச் சுத்தமாகப் பிடிப்பதில்லை.*

*நடக்கும் அநீதிக்கு எதிராக மக்கள் நேருக்கு நேர் கேள்வி கேட்கவேண்டும். அவர்களின் கொட்டத்தினை அடக்கவேண்டும் என்பதே எனது விடாப்பிடியான கொள்கையாகும். எனது கொள்கையும், பிடிவாதமும் தமது பெயருக்கு அபகீர்த்தி ஏற்படுத்துவதாக, அப்பர் மட்டுமல்ல குடும்பத்தவர் எல்லோரும் சேர்ந்து, ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றினர். விளைவு நான் பதினைந்து பதினாறு வயதளவில் ஊர்கடத்தப்பட்டு, புலம் பெயர்ந்தேன். சும்மா சொல்லக்கூடாது, அங்கு போன பின்பு, எனக்கு நல்ல பேர். நான் திருந்திவிட்டேன் என்று பொருள் அல்ல, ஊரில் எனக்கு ஏற்பட்ட அனுபவத்தினால், எனது போராட்ட அணுகு முறையினை மாற்றியமைத்தேன். பாதிக்கப்படுவோரை இனம்கண்டு, அவர்கள் போராடுவதற்கான உரிமையையும், உணர்வினையும் அவர் மனதில் ஆழமாக விதைப்பேன். பின்னர் பயிர் தானாகவே வளரும். நானும் மூன்றாம் நபராக அதில் பங்கு கொள்வேன். அதனால் ஊர்மக்களிடம் நல்ல பேரும், அப்பரிடமிருந்து பாராட்டும் கிடைத்தது. நான் உயர்தரம் பயின்று சித்தியடைந்த போதிலும், நாட்டில் ஏற்பட்ட யுத்த சூழலால் எனது மருத்துவ பட்டப்படிப்புக் கனவு, கனவாகவே இன்றும்.*

*அதிருக்கட்டும், நான் கொழும்பு வாசியாகிப் பின்னர் சம்சாரியாகி, இன்று முதியவர் என்ற பட்டமும் கிடைத்த பின்பும், எனது போராட்ட குணாம்சம் மாறவில்லை. அதுவே இப்பொழுது விசாரணைக் கடிதம்வரை வந்துள்ளது. ஊரில் எனது உறவென அக்கா மட்டுமே எஞ்சியுள்ளார். நேரம் கிடைக்கும் போதெல்லாம் அக்காவைப் பார்க்க ஊருக்குச் சென்று வருகின்றேன். அக்காலங்களில் கண்ணில்படும் பிரச்சினைகளில் மூக்கை நுழைப்பது எனது பிறவிக்குணம். அதில் ஏதோ ஒன்றுதான் விசாரணைக் கடிதத்துக்குக் காரணம் என்று யூகித்தாலும், சுட்டிப்பாக ஏது என்று, மூளையைக் குடைந்ததன் விளைவுதான் நிதானமிழந்து, மன அழுத்தத்திற்கு உட்பட்டேன். யுத்தத்தினால் இடம் பெயர்ந்து குடாநாட்டில் வசிப்போரின் நிலங்களைக் கள்ள உறுதிமுடித்து அபகரித்தல், சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபடுதல், அதனால் உப்பு நீர் ஊருக்குள் புகுதல், அனுமதியின்றி தமக்கு உரித்தில்லாத மரங்களை வெட்டுதல், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் ஜீவாதார உதவிகளை உண்மையான பயனாளிகளுக்குக் கிடைக்காமல் அபகரித்தல், மற்றும் உரவரின் கால்நடைகளைத் திருடி இறைச்சிக்கு விற்றல் போன்ற இன்னோரன்ன பிரச்சினைகளைக் கண்ணுற்று மனம் பொறுக்காமல், சம்மந்தப்பட்ட இடங்களுக்கு புகார் எழுதுதல், ஊரில் பெரிய மனிதர்களாக வேடமிட்டு, அயோக்கியத்தனம் புரிவோரைத் தோலுரித்துக்காட்டுதல் என, எனது மக்கள் பணி விஸ்தாரமானது. இவற்றில் கடிதம் வரக்காரணம் யாதென்று, மூளையைக் கசக்கிப்பிழிகின்றேன். சொந்த மண்ணைத் தொட்டு, உறவுகளைக் கண்டு மகிழ்ந்து,*

*ஒருவாறு இரவும் தாண்டிப் பகலாகிவிட்டது, அக்காவிடம் பேச்சுக் கொடுக்கின்றேன். விசாரணைக் கடிதத்துக்குக் காரணம் என்னவாக இருக்கும் என்று. தெரியாது தம்பி என்னும் பொருளில், தலையை ஆட்டுகின்றார். சரி இன்னும் ஓரிரு மணித்தியாலங்களில் தெரியவரும் என்று சமாதானம் அடைகின்றேன். பிரதேச சபை அலுவலகம். பலரோடு நானும் ஒருவராகக் காத்திருக்கின்றேன். ஆமை வேகத்தில், இல்லை நத்தை வேகத்தில் ஒவ்வொருவர் விவகாரமும் நகர்கின்றன. நூறு நோயாளிகளுக்கு அரைமணி நேரத்தில் மருந்தெழுதிக் கொடுக்கும் அரசாங்க வைத்தியசாலை (வைத்தியர்கள் திறமையும், சாமர்த்தியமும் வாய்த்தவர்கள். அவர்களை விமர்சிக்கும் ஞானம் எமக்கு எங்கே?) இரண்டையும் ஒப்பிட்டு வியக்கின்றேன்.*

*“டை” கட்டி, சப்பாத்து அணிந்து, விலை உயர்ந்த மூக்குக் கண்ணாடியுடன் ஆங்கிலேயர் பாணியில் கம்பீரமாக அமர்ந்திருக்கின்றார் செயலாளர். அவர் முன் சென்று, வணக்கம் சொல்கின்றேன். பதில் வணக்கமில்லை. ஆங்கிலேயர் போல வேடம்தரிக்க மட்டுமே தெரிந்தவர்களுக்கு, அவர்களின் பண்பு வெகுதூரத்தில். நிமிர்ந்து என்னைப் பார்க்காமல்*
*“என்ன விசயம்” சொற் சிக்கனம். அதிகார நாற்காலியின், ஆணவ உச்சாணியின் இருப்பு.*

*நானும் சளைத்தவனா? வார்த்தைகளைத் தேக்கி, சலனமில்லா முகபாவத்துடன், கடிதத்தினைச் செயலாளர் முன் நீட்டுகின்றேன். கடிதத்தினைப் பார்த்த மாத்திரத்திலேயே,*
*“ஓ நீர்தான் அந்தப் புரட்சிக்காரனோ?” என்னை அறியாமலே இரத்தம் சூடேறுகிறது. கஷ்டப்பட்டு நிதானத்தினை வருந்தி அழைக்கின்றேன். மரியாதைக்குக் கூட அமரச் சொல்லவில்லை. நிற்கவைத்தே வார்த்தைகளால் அவமானப் படுத்துகின்றார்.*

*“நீர் மாட்டுக்கு எப்பிடிக் குறி சுட்டீர்?” மீண்டும் மரியாதை கலந்த நக்கல் கேள்வி. எனக்கு இப்பொழுதுதான்*

நான் செய்த கலாசார மீறல் புரிகின்றது. ஊரில் உள்ள மாடுகளுக்கு ஒவ்வொரு குடும்பமும் குறிசுடுவது வழக்கம். ஆனால் அந்தக்குறியில் நீ எந்தச்சாதியான் என்பதைக் குறிப்பிடும் குறியீடு தனித்தனியாக இருக்கும்.

"பறத் தெமலே" என்றுதான் சிங்கள இனவாதிகள் குறிப்பிட்டு, பல இனக்கலவரங்களில் தமிழருக்குக் குறிசுட்டான்கள். அதன் பின்விளைவுதான் தமிழ்த் தேசிய எழுச்சி, தமிழ் இரத்தத்தின் இரத்தங்கள் என்ற கோஷங்கள் எல்லாம் ஒன்றுதிரண்டே ஆயுதங்களின் எழுச்சி. பின்னர் எல்லாம் பொய்யாகி ஒட்டுமொத்தத் தமிழரும் கையறுநிலையில், மடிப்பிச்சை எடுத்துக் கொண்டிருக்கும், "திரிசங்கு" சொர்க்க நிலையில், சாதியை அடையாளப் படுத்தும் குறியை, மாடுகளுக்குச் சுடுவதை மாற்றித் தமிழரின் பெருமையையும், கலாசாரத்தினையும் சீரழித்தமை சாதாரண தண்டனைக்குரிய குற்றமா?! பிரதேச சபையின் அதிகார மையம் என்னைப் பஞ்சாயத்துப் பண்ணுகின்றது.

போன மாதம் எனது பிள்ளையுடன் ஊருக்கு வந்தபோது, "கொஞ்ச நாளா எங்கட மாடுகள் களவு போகுது தம்பி, அதுகளுக்குப் பிள்ளையின்ர பேரில குறிசுடன்" அன்புக் கட்டளை இட்டார் அக்கா.
எனது பிள்ளை கொழும்பில் பிறந்து வளர்ந்தவள். எனது மனைவியும் கொழும்புக்காரி. அவவுக்கும் சாதியள், குறியள் பற்றித் தெரியாது, பிள்ளையின் நிலையோ சொல்லத் தேவையில்லை!, கட்டாயம் பிரத்தியேக வகுப்பெடுத்தே விளங்கப்படுத்த வேண்டும். பத்து வயது பிள்ளையின் மனசில், நச்சு விதையை விதைத்து, "நாங்கள் தீண்டத்தகாதவர்கள், மற்றவர்களை விட இழிவானவர்கள்" என்ற தாழ்வு மனப்பான்மையினை ஏற்படுத்த விரும்பவில்லை. குறிசுட வேண்டும். எப்படிச் சுடுவது, என்று யோசித்தேன்.


ஒவ்வொரு சாதிக்கும் ஒவ்வொரு சாதிக்குறி. "ம" எழுத்துடன் இளம்பிறை வடிவமும் சேர்ந்த சின்னமே எமது சாதிக்கான குறி. அதனுடன் பெயரைச் சுருக்கமாக எழுதலாம். குறிசுடுவதிலிருந்து ஒவ்வொன்றுக்கும் காரணம் கேட்பாள் மகள். எப்படிப் பொய்யுரைப்பேன். எனக்குள் ஒரு திட்டம் உருவானது. உயர் சாதியினராகிய நீங்கள் வேணுமானால் உங்கள் சாதிக் குறியைச்சுட்டு, தமிழரின் பண்பாட்டினைப் பேணிக் கொள்ளுங்கள். உங்களால் ஒடுக்கப்படும் சாதி நாம் என்பதையும், உங்களின் அடிமை, குடிமை என்பதனையும் இனியும் நான் ஒப்புக்கொள்ளமாட்டேன், என்ற ஓர்மம் ஏற்பட்டது.

எமது வீட்டுக்கான குடிசன மதிப்பீட்டு இலக்கம் 66. அதுதானே எமது வீட்டு முகவரி. அதனையே மாட்டுக்குக் குறியாக்கத் தீர்மானித்தேன். அவ்வாறே குறிசுட்டேன். இதுதான் கலாசாரத்தினை
மீறியதும், கிராமத்தின் இயல்பு நிலைக்கு ஊறு விளைவித்ததும்.
"என்ன காணும் கேள்விக்குப் பதிலைக் காணம்?" செயலாளர் மிடுக்குடன் கேட்கிறார். சிந்தனை கலைந்த நான், "இல 66 விஷாலினி"
"ஏன் அப்படிச் செய்தீர், உங்களுக்கெண்டொரு குலக்குறி இருக்கெல்லோ?" செயலாளர் அதிகார தோரணையில் மிரட்டுகின்றார்.
"ஐயா! நான் சின்ன வயதிலேயே, ஊரை விட்டுப் போயிட்டன். என்ன குறி எண்டு எனக்குத் தெரியாது" மிகுந்த மரியாதையுடன் பவ்வியமாகக் கூறுகின்றேன்.
"தெரியாவிட்டால் சொந்தக்கரர், சாதிக்காரரிடம் கேட்டிருக்கலாம்
தானே?" மீண்டும் எரிச்சலுடனான அதிகார மிரட்டல். நான் மீண்டும் அடக்கமாகச் சொல்கின்றேன்,
"அப்படி எனக்கு யாரையும் தெரியேல்ல ஐயா!, மனிசனுக்கு
சாதிபாத்தவை, இப்ப மாட்டுக்கும் பாக்கினமோ!?"
"என்ன குசும்பா" மீண்டும் செயலாளர் சீறுகின்றார். எனது தன்மானம் இதற்கு மேலும் அடங்க மறுக்கின்றது. "எப்படிக் குறிசுடவேண்டும் எண்டு, எழுத்தில தாங்கோ? என்ன செய்யிறதென்டு பாக்கிறன்" எனது பணிவும் மரியாதையும் வெகுதொலைவுக்குச் சென்றுவிட்டது. கோபமாகப் பேசுகின்றேன். என்னைப் புழுவாகப் பார்த்த செயலாளர், "ஐயா ஏன் கோபப்படுகிறீர்? உம்மை விசாரணை செய்ய, அழைக்கவில்லை. ஊருக்கு எண்டு ஒரு சம்பிரதாயம் இருக்கெல்லே? அதைப் பேணிப் பாதுகாப்பது தமிழராகிய எமது கடமையல்லவா" மிகவும் பணிவாகப் பேசுகின்றார். நெஞ்சை நிமிர்த்திக் கேள்வி கேட்டபொழுது, தமிழர் கலாசாரம் கெட்டுவிடுமாம். மனிசனை மனிசன் மதிக்காத நாசமாய்ப்போன சாதிக்கலாசாரம் யாருக்கு வேண்டும். பொதுசன சேவை நிலையம் என்று, அடக்கமாக ஒலித்த எனது குரல், உச்சஸ்தாயில் உயர்கின்றது.

"பாழாய்ப்போன தேசவழமைச் சட்டத்தையும், சாதியையும் இப்பவும் தூக்கிப்பிடித்தால், மனித உரிமை மீறல், ஒடுக்கு முறைக்கு எதிரானசட்டமீறல்..... என்றெல்லாம் எனக்கும் தெரியும்"
ஆக்கிரோசமாக, ஒரு குட்டிப் பிரசங்கமே நிகழ்த்திவிட்டேன்.

பிரதேச சபையே வாய்பிழந்து, செயலற்று....!
யாருடைய பதிலையும் எதிர்பாராமல் மிடுக்குடன் நடக்கின்றேன். □

# சிறுவர் பூஞ்சோலை




**நயனி அஷோக்**
*(Canada)*



**ஜோயலா பிரேமன்**
*(France)*